மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.**T.கோகுலகிருஷ்ணன்** **B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
**2022**ம் வருடம் **நவம்பர்** மாதம் **17**ம் நாள் **வியாழக்**கிழமை
**சுபகிருது** ஆண்டு **கார்த்திகை** மாதம் **01**ம் நாள்
**EA.No.53/2021**
**in**
**EP.No. 27/2008**
**in**
**O.S. No.54/2003**

1. G. ரமேஷ்
2. R. அனுசுயா ..... மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள்

//எதிர்//

1. A. காமாட்சி (எ) காமாட்சியாபிள்ளை
2. A. தமிழ்செல்வன் (எ) போஸ் .... எதிர்மனுதாரர்கள்/1&2 மனுதாரர்கள்/1,2வாதிகள்

இம்மனு **08.11.2021**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.S.ராதாகிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/1&2 மனுதாரர்கள்/1,2வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.S.சிவசுப்ரமணியன்** மற்றும் திரு.K.K.**ரவி** அவர்கள் ஆஜராகியும், கடந்த **26.10.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த மனுவானது, நீரேத்தான் கிராமம் ரீ.ச.எண்.13/7B நிர் ஏக்கர் செண்டு 35-ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 832 சதுரடி மற்றும் மேற்படி நீரேத்தான் கிராமம் புன்செய் சர்வே 13/7B நிர்க்கு UDR படி 13/20 நிர்க்கு 0.01.5க்கு செண்ட் 4-1/2 செண்ட் 3 கிழமேல் 44-1/2 அடி தென்வடல் 31 அடிக்கு 1379 -1/2 சதுரடி ஆக தற்பொழுதைய சப்டிவிசன்படி சர்வே எண். 13/20 சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர்கள்/நிறைவேற்று மனுதாரர்கள்/வாதி (தீர்ப்பாணை பெற்றவர்கள்) களால் தாக்கல் செய்யப்பட்ட இ.பி.எண். 27/2008 மனுவினை வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்திட உத்தரவிடக்கோரியும், கட்டளை 21 விதி 97 மற்றும் 99 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/3ம்

தரப்பினர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

i) மனுதாரர்கள் அசல் நிறைவேற்று மனு எண்.27/2008 மற்றும் அசல் வழக்கு எண். 54/2003-ன் தரப்பினரல்ல என்றும்,

ii) அசல் வழக்கு எண். 54/2003 வழக்கு மனுவின் எதிர்மனுதாரர்களால் வழக்கு சொத்துக்களை பொறுத்து சுவாதீன ஒப்படைப்பு மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படி அசல் வழக்கின் எதிர்மனுதாரர்கள் சுப்ரமணியம் அய்யர் மற்றும் சேதுராமன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 20.10.2003ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக தீர்ப்பாணையினை நிறைவேற்றுவதற்கு நிறைவேற்று மனு எண். 27/2008ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

iii) ஆனால், மேற்படி நிறைவேற்று மனுவினை கடந்த 02.07.2013ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில், எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு எண். CRP(MD) No.1451/2013 (NDP) மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவிலும், அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆஜராகாத நிலையில், மேற்படி மனுவும் கடந்த 02.03.2021 தேதியில் கீழமை நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து சுவாதீன ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றும்,

iv) அதன் பின்பு எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் நீதிமன்ற அமீன் மூலம் ஒப்படைப்பு எடுக்க கடந்த 22.10.2021 தேதியில், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு எதிர்மனுதாரர்கள் நுழைந்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையின்படி 3வது லக்க சொத்தில் 2வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதியான நீரேத்தான் கிராம ரீ.ச.எண். 13/7B நிர் ஏக்கர் 1 செண்டு 35ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 832 சதுரடி மற்றும் மேற்படி நீரேத்தான் கிராமம் புன்செய் சர்வே 13/7B நிர்க்கு UDRபடி 13/20 நிர்க்கு 0.01.5க்கு செண்டு 4-1/2யில் செண்ட் 3க்கு கிழமேல் 44-1/2 அடி தென்வடல் 31 அடிக்கு 1379-1/2 சதுரடி ஆக தற்பொழுதைய சப்டிவிசன்படி ச.எண். 13/20 இடத்திற்குள் அடங்கிய இடத்தின் சுவாதீனத்தையும் எடுத்து ஒப்படைப்பு செய்ய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும்,

v) மேற்படி சொத்து தாவா 3வது லக்க சொத்தில் அடங்கியுள்ளதாக 2003ம் ஆண்டில் அசல் வழக்கில் ஆணையர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும், மேற்படி சுவாதீன ஒப்படைப்பு செயல் முயற்சி சட்டப்படி தவறானது என்றும், மேலும் மேற்படி அசல் வழக்கிலோ அல்லது இ.பி. 27/2008 மனுவிலோ மனுதாரர்களோ அவர்களின் முன் கிரையதாரர்களோ எவரும் தரப்பினராக இல்லாதபொழுது மேற்படி தீர்ப்பாணை இந்த மனுதாரர்களை கட்டப்படுத்தாது என்று நீதிமன்ற அமீன், வாடிப்பட்டி காவல்நிலைய அதிகாரியிடமும் 1ம் மனுதாரர் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, இந்த obstruction மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

vi) தாவா இ.பி.எண்.27/2008 மனு மற்றும் விசாரணை நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி பிராது 3வது லக்க சொத்தில் ஒரு பகுதி சொத்தான நீரேத்தான் கிராமம் ரீசர்வே எண்.13/7B நிர் ஏக்கர் செண்டு 35ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 832 சதுரடி (1) மேற்படி நீரேத்தான் கிராமம் புன்செய் சர்வே 13/7B நிர்க்கு UDR படி 13/20 நிர்க்கு 0.01.5க்கு செண்டு 4-1/2 செண்ட் 3 கிழமேல் 44-1/2 அடி தென்வடல் 31 அடிக்கு 1379-1/2 சதுரடி, தற்பொழுதைய சப்டிவிசன்படி சர்வே எண். 13/20 (2) இடத்தினை கடந்த 17.12.2012ம் தேதியில் மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள் ராமானுஜம் என்பவரிடம் பதிவு பத்திரம் மூலம் கிரையம் பெற்ற சொத்தாகும் என்றும்,

vii) அதற்கு முன்பு, மேற்படி மனுதாரர்களின் முன்கிரையதாரர் ராமானுஜம் அவர்கள் கடந்த 2000ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 21ம் தேதியில் செல்லம்மாள் வகையறாவிடம் இருந்து மேற்படி புஞ்சை சர்வே எண். 13/7B நிர்க்கு புஞ்சை காலிமனையிடம் 0.01.5 ஏர்ஸ்க்கு செண்டு 4-3/4-ல் தென்புறம் செண்டு 3க்கு கிழமேலடி 44-1/2 தென்வடல் 31 ஆக 1379 -1/2 சதுரடியை கிரையமாக பெற்றும், அதேபோல், ராமானுஜம் என்பவர் கடந்த 24.02.2000ம் தேதியில் பூமிநாதன் வகையறாவிடம் இருந்து சர்வே எண். 13/7பி நிர் ஏக்கர் 1 செண்ட் 35ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி உள்ள 832 சதுரடி இடத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி இடத்தின் புது ரீசர்வே எண். 13/20 என்றும்,

viii) மனுதாரர்கள் கிரையம் பெற்ற தேதி முதல் நாளது தேதி வரை எவ்வித இடைஞ்சலும் இன்றி அமைதியான முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதற்கு முன்பு மனு சொத்து அவர்களுடைய முன்கிரையதாரர்களால் 1954ம் வருடம் முதல் அனுபவம் செய்யப்பட்டு வரப்பட்டுள்ளது என்றும், மேற்படி உண்மை விபரங்களை மறைத்து அசல் வழக்கின் வாதிகளால் மனுதாரர்களையோ, அவர்களது முன் கிரையதாரர்களையோ அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் சொத்துக்கு சம்பந்தமில்லாதவர்களை தரப்பினர்களாக சேர்த்து நீதிமன்றத்தை ஏமாற்றி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பெற்று, அதனடிப்படையில் மனுதாரர்களின் சொத்தினை சுவாதீனம் எடுக்க முயற்சி செய்வதால், மனுதாரர்களை மனு சொத்தின் உரிமையாளர் என விளம்புகை செய்தும், நிறைவேற்று மனு எண். 27/2008-ஐ தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியது அவசியமானது என்றும், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடமும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாதது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி தரப்பு எதிர்மனு உரையின் சுருக்கம்**

i) 2ம் எதிர்மனுதாரரால், அவரது சகோதரரான 1ம் எதிர்மனுதாரருக்கும் சேர்த்து எதிர்மனு

உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கும் அவரது தாயாருக்கும் தனித்து உரிமை பாத்தியப்பட்ட சொத்து ஆகும் என்றும், R. சுப்ரமணியன் மற்றும் R. சேதுராமன் ஆகியோர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கும் கடந்த 20.10.2003ம் தேதியில் தீர்ப்பாணை வழங்கப்பட்டு, அதன் பின்னர், நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டதில், மேற்படி நிறைவேற்று மனுவும் கடந்த 22.07.2013ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதால், அதன் பேரில் CRP.No. 1451/13ன்படி மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 02.03.2021 தேதியில் நிறைவேற்று மனுவினை அனுமதித்து, அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீ.ம.சா.ஆ.1,2 நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின்படி மனு சொத்தினை சுவாதீன ஒப்படைப்பு செய்ய 3 மாத காலத்திற்குள் கீழமை நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும்,

ii) எனவே, தாவா சொத்தினை பொறுத்து ஆக்கிரமிப்பாளர் மற்றும் அத்துமீறியவர்கள் மனுதாரர்கள்/3ம்தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவில் தரப்பினர்களாக குறிப்பிடப்படாததால், இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், மனு அபிடவிட்- பாரா 3 முதல் 5 ல் உள்ள சங்கதிகள் தவறு, பொய் மற்றும் உண்மைக்கு புறம்பானது என்றும், அதனை மனுதாரர்களே நிரூபணம் செய்யக்கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு சட்டப்படியும் பொருண்மைபடியும் ஏற்கத்தக்கதல்ல என்றும், அதனால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும்,

iii) எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் கோரப்படும் கேள்வி என்னவென்றால், கட்டளை 21 விதி 97 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி, நிறைவேற்றப்பட்ட உத்தரவினை, நிறைவேற்று மனுவில் தரப்பினர் அல்லாமல் சொத்தின் உரிமையாளர் என 3ம் தரப்பினர்களான ஆட்சேபணைதாரர்கள் நிறைவேற்று மனு உத்தரவை எதிர்க்க முடியுமா என்பதாகும் என்றும்,

iv) மேலும் பாரா 3ல் கண்டுள்ள சங்கதிகள் தவறானது என்றும், ஏனென்றால், மனுதாரர்களின் முன்னோர்கள் 1954ல் மனு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றதாகவும், மனுதாரர்கள் 2007ல் கிரையம் பெற்று அனுபவித்து வருவதற்கு ஆதரவாக மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்,

v) நிறைவேற்று நீதிமன்றமானது தன்னிச்சையாக 3ம் தரப்பினரை விசாரணை செய்ய இயலாது என்றும், அவ்வாறு செய்வது கட்டளை 21 விதி 35 உரிமையியல் நடைமுறைச்சட்டத்திற்கு எதிரானது என்றும், நிறைவேற்று நீதிமன்றத்தில் 3ம் தரப்பினரால்

தாக்கல் செய்யக்கூடிய தடை மனுவை பொறுத்து நிறைவேற்று மனுவினை நிறைவேற்றிட தடை செய்ய இயலாது என்றும்,

vi) கட்டளை 21 விதி 99 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி, தீர்ப்பு கடனாளியை தவிர மற்ற சுவாதீன இழப்பு ஏற்படும் நபர்கள் சுவாதீனத்தில் இருந்து அகற்றப்பட்டால் மட்டுமே சுவாதீன இழப்பு குறித்து மனு தாக்கல் செய்து பரிகாரம் கோர இயலும் என்றும்,

vii) கட்டளை 21 விதி 97 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி, நிறைவேற்று மனு உத்தரவின்படி, சொத்தின் சுவாதீனத்திலிருந்து 3ம் தரப்பினர் அகற்றப்படாததால் மனு தாக்கல் செய்வதற்கு இந்த மனுதாரர்கள்/3ம்தரப்பினர்களுக்கு உரிமை தகுதி(Locus Standi) இல்லை என்றும், நிறைவேற்று மனுவில் தரப்பினராக இல்லாத 3ம் தரப்பினர் மனு தாக்கல் செய்ய இயலாது என்றும், மனு சொத்தின் சுவாதீனத்திலிருந்து மனுதாரர்கள்/3ம்தரப்பினர்கள் அகற்றப்படாததால், கட்டளை 21 விதி 99ன்படி இம்மனுவினை மனுதாரர்கள்/3ம்தரப்பினர்கள தரப்பில் தாக்கல் செய்ய இயலாது என்றும்,

viii) அசல் வழக்கின் தீர்ப்பாணை கடந்த 2003ம் வருடம் பகரப்பட்ட நிலையில், தீர்ப்பாணை பெற்றவர் தீர்ப்பின் பலனை பெறுவதற்கு சட்டப்படி உரிமையுடையவர் என்பதால், மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRP(MD).No.1451/2013ன்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் படி, தீர்ப்பாணை நிறைவேற்றம் செய்திட நிறைவேற்றுதல் நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், எனவே, நிறைவேற்றல் நீதிமன்றத்தால், தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்யும் நிலையில், மனுதாரர்கள்/.3ம் தரப்பினர்ளால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவினை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) மனுதாரர்கள் தரப்பில், மனு சொத்து மனுதாரர்களுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றும், இ.பி. 27/2008 மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கு எண். OS.No. 54/2003 வழக்கினை மனு சொத்தின் ஒரு பகுதியினை அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என சம்பந்தமில்லாத நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்து, பிரதிவாதிகள் அசல்

வழக்கில் ஆஜராகாததால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்று அதனடிப்படையில், மனு சொத்தினை ஒப்படைக்க மனு செய்து நீதிமன்றத்தினை ஏமாற்றி உத்தரவு பெற்று ஒப்படைப்பு எடுக்க வந்ததை தடுத்து நிறுத்த வேண்டி கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன்படி Obstruction of Possession மனுவான இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

i) மனு சொத்தானது இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் கடந்த 17.12.2012 தேதியில் ராமானுஜம் என்பவரிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி, இராமானுஜம் அவர்கள் தாவா மனு சொத்தை கடந்த 24.02.2000ம் தேதியில், பூமிநாதன் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேலும், ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.8 வரையில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், மனு சொத்திற்குண்டான மூல ஆவணங்களாகும் என்றும், அதனடிப்படையில், தாவா மனு சொத்து மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு உரிமைமூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேலும், சா.சா.ஆ.1 முதல் 22 வரையிலான தாவா மனு சொத்திற்கான யுடிஆர் காலத்தில் உள்ள வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் தகப்பனாரால் ஏற்கனவே ம.சா.ஆ.5ன்படி மனு சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றும், மேற்படி, ம.சா.ஆ.5 ஆவணத்தை மறைத்து இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவின் அசல் வழக்கான OS.No. 54/2003 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் முன்னோர்களால் தாவா மனு சொத்தை பொறுத்து, பல்வேறு ஆவணங்கள் வாயிலாக அதாவது ம.சா.ஆ.5, ம.சா.ஆ.13, ம.சா.ஆ.14, ஆகிய ஆவணங்கள் மூலம் 3ம் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு தாவா மனு சொத்தில் எவ்வித உரிமைமூலம் ஏதும் இல்லையென்றும்,

ii) இவ்வாறு, மேற்படி விற்பனை விபரத்தை மறைத்து தாவா மனு சொத்திற்கு சம்பந்தமில்லாத நபர்களை தரப்பினர்களாக சேர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு பாத்தியமான சொத்தினை அபகரிப்பதற்கு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாக நிறைவேற்று மனு தாக்கல் செய்து மனு சொத்தினை சுவாதீன எடுப்பு கோர முயற்சி செய்யப்பட்டுள்ளதால், தாவா மனு சொத்து மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு பாத்தியமானது என விளம்புகை பரிகாரம் கோரியும், நிறைவேற்று மனு உத்தரவினை ரத்து செய்ய கோரியும் மற்றும் 1) 2019(6) CTC 543 2) 2013(3) CTC 356 3) 2008(5) CTC 137 4) AIR 1993 SC 856 5) 2011(4) CTC 172. 6). AIR 1998 SC 358 7) 2008(1) CTC 161 8) AIR 2009 SC 511 9) 2004(1) CTC 54(SC) 10) W.C.No. 4788 of 2015 என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற முன்தீர்ப்புரைகளை சுட்டிக்காட்டியும், எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்தும், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் மனு சொத்திற்கு உரிமைமூலம் உள்ளது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனு நிலைநிற்கத்தக்கது என்றும், இம்மனுவினை

ஏற்றுக்கொண்டு அனுமதித்து, எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட அசல் நிறைவேற்று மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

5) இம்மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டு எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

i) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுவில் கண்ட 1 மற்றும் 3வது லக்க சொத்தில் உள்ள ஒரு பகுதி சொத்தான இந்த மனு சொத்துக்களை மனுதாரர்/3ம் தரப்பினரான S.V.காந்தி என்பவருக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்து அதன் தொடர்ச்சியாக இ.பி. 27/2008 மனுவினை வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்திட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 22.07.2022-ல் இம்மனுவின் மனுதாரரான G. ரமேஷ் என்பவரின் முதல் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் EA.No. 55/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதேபோல் மேற்படி ம.சா.1.ம் தனது முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும், மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில் தனக்கு 2211 -1/2 சதுரடி பாத்தியம் என்றும், 22.07.2022 குறுக்கு விசாரணையின்பொழுது 4-3/4 செண்ட் தனக்கு பாத்தியம் என்றும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும்,

ii) உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 97ன்படி தீர்ப்பாணை பெற்றவர் அல்லது நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தின் அனுபவத்தினை பெற உரிமையுடையவர் அல்லது வேறு எந்த நபரும், சொத்தின் அனுபவத்தினை பெறுவதற்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில், மேற்படி சட்டப்பிரிவின்படி நிவாரணம் கோரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் ஏற்கனவே, தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லும் நிலையில், மேற்படி சட்டப்பிரிவின்படி இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் நிவாரணம் பெறுவதற்கு அவசியம் ஏதும் இல்லை என்றும்,

iii) உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 99ன்படி, தீர்ப்பு கடனாளி அல்லாத பிற ஆள் எவரும் அசையா சொத்தின் சுவாதீனத்தை தீர்ப்பாணை பெற்றவரால் அல்லது நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தினை வாங்கியரால் இழப்பு செய்யப்படுகிறவிடத்து அத்தகைய சுவாதீன இழப்பு பற்றி முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம் என்றும், ஆனால், மனுதாரர்கள்/3ம்கோரிக்கை ஆட்சேபணை மனுதாரர்களுக்கு தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ள சுவாதீன இழப்பு ஏற்படாததால், அது தொடர்பாக பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றும், எனவே இம்மனு கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன்படி சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என எழுத்துப்பூர்வமான வாதுரையும், கூடுதல் எழுத்துப்பூர்வமான வாதுரையும் தாக்கல் செய்தும், 2019 (5) CTC 104, 2021 (2) MWN (Civil)

578 Rahul S. Shah (v) Jiendra Kumar Gandhi and Other case என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் R. Jankiammal (v) S.K. Kumarasamy 2021 (2) MWN (Civil) 544 (SC), 2022 (HCTC 278) SC JJ Indira Banerjee and J.K. Maheswari என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்புரைகளை சுட்டிக்காட்டியும், கட்டளை 21 விதி 97 மற்றும் விதி 99 உரிமையியில் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் இம்மனு தாக்கல் செய்திட அருகதை இல்லையென்றும், மனு சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் உள்ள மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் இம்மனுவை தாக்கல் செய்திட உரிமை இல்லையென்றும்,

iv) மேலும், எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணைபெற்றவர்கள்/வாதிகளால், தீர்ப்பாணையின் பலனை பெறுவதற்கு உரிமையுடையவர் என்றும், நிறைவேற்றல் நீதிமன்றம் தீர்ப்பாணைக்கு அப்பால் செல்ல முடியாது என்றும், ஏற்கனவே, 3ம் தரப்பினர்களால், இந்த அசல் நிறைவேற்று மனுவில் E.A.No. 70/2004 இராமசந்திரன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல், S.V. காந்தி என்பவரால், EA.No. 55/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், பஞ்சவர்ணம் மற்றும் சிதம்பரம் ஆகியோர்களால், EA.No. 04/2008 மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகளால் கூடுதல் எழுத்துப்பூர்வமான வாதுரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 97 மற்றும் 99க்கு முரணாக உள்ளதால் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என வாதுரைக்கப்பட்டுள்ளது.

6) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகள் மற்றும் மனு அபிடவிட் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

7) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புரைகளின் கருத்துரைகளை சமூக நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அதேபோல, எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புரைகளின் கருத்துரைகளை சமூக நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

8) கட்டளை 21 விதி மற்றும் பிரிவு 97 மற்றும் 99 உ/இ பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/3ம்கோரிக்கை தரப்பினர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மேற்படி கட்டளை 21 விதி 97 என்பது,

**97. Resistance or obstruction to possession of immovable property .** - (1) Where the holder of a decree for the possession of immovable property or the purchaser of any such property sold in execution of a decree is resisted or obstructed by any person in obtaining possession of the property, he may make an application to the Court complaining of such resistance or obstruction.

(2) Where any application is made under sub-rule (1), the Court shall proceed to adjudicate upon the application in accordance with the provisions herein contained.)]

மற்றும் கட்டளை 21 விதி 99 என்பது,

**99. Dispossession by decree-holder or purchaser.** - (1) Where any person other than the judgment-debtor is dispossessed of immovable property by the holder of a decree for the possession of such property or, where such property has been sold in execution of a decree, by the purchaser thereof, he may make an application to the Court complaining of such dispossession.
(2) Where any such application is made, the Court shall proceed to adjudicate upon the application in accordance with the provisions herein contained. ]

இவ்வாறு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் சொல்லப்பட்டதை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

10) இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரம் என்பது,

**1. மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், நீரேத்தான் கிராமம் ரீ.ச.எண். 13/7B நிர் ஏக்கர் செண்டு 35ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 832 சதுரடி.**

**2. மேற்படி நீரேத்தான் கிராமம் புன்செய் சர்வே 13/7B நிர்க்கு UDR படி 13/20 நிர்க்கு 0.01.5க்கு செண்ட் 4-1/2 செண்ட் 3 கிழமேல் 44-1/2 அடி தென்வடல் 31 அடிக்கு 1379 -1/2 சதுரடி.**

**ஆக தற்பொழுதைய சப்டிவிசன்படி மேற்படி இரண்டு இலக்க சொத்துக்களும் சர்வே எண். 13/20ல் அடங்கியுள்ளது.**

இவ்வாறு மனுவில் சொத்து விபரம் சொல்லப்பட்டுள்ளது.

11) கட்டளை 21 விதி 97 மற்றும் 99 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் அசல் வழக்கிலோ, அசல் நிறைவேற்று மனுவிலோ தீர்ப்பு கடனாளியாக இல்லாத நிலையிலும், தாவா மனு சொத்தின் அனுபவத்திலிருந்து நாளது தேதி வரை வெளியேற்றப்படாத நிலையிலும் (Not dispossessed) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் மனு சொத்து உரிமைமூலம் பாத்தியப்பட்டதாக விளம்புகை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) அதன்படி, மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால், தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளியாக இல்லாத நிலையிலும், தாவா சொத்தின் அனுபவத்திலிருந்து வெளியேற்றப்படாத நிலையிலும், கட்டளை 21 விதி 97 மற்றும் 99 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் உரிமைமூலம் குறித்து மனுதாரர்கள்/3ம் கோரிக்கைதரப்பினர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியதா? அல்லது இல்லையா? என்பதைக் குறித்து சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

13) ம.சா.ஆ.1 என்பது, கடந்த 17.12.2012ம் தேதியில் இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் மனுவில் கண்டுள்ள சொத்தை கிரையம் வாங்கியதற்கான அசல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.1-ல் "**லெட்சுமிபுரம் புதூரில் வசித்து வரும் பூமிநாதன் வகையறா பேர்களிடமிருந்து கிரையம் பெற்று, 24.02.2000ந் தேதியில் வாடிப்பட்டி சப்ரி ஆபீசில் 1.487.87 to 89.200/2000ம் நம்பராகப் பதிவு செய்து வாங்கியுள்ள கிரையப் பத்திரப்படியும், 21.08.2003ந் தேதியில் மேற்படி லெட்சுமிபுரம் புதூரில் வசித்து வரும் செல்லம்மாள் வகையறாப் பேர்களிடமிருந்து வாடிப்பட்டி சப்ரி ஆபீசில் 1.4999.143 to 147.946/2000ம் நம்பராகப் பதிவு செய்து வாங்கியுள்ள கிரையப் பத்திரப்படியும், எனக்கு கிரையப் பாத்தியப்பட்டு,**" இவ்வாறு கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

14) மேற்படி ம.சா.ஆ.1-ல் கண்டுள்ள சொத்து விபரமும், இந்த மனுவில் கண்டுள்ள சொத்து விபரமும் ஒரே சொத்து ஆகும். அசல் நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்து என்பது, 3 அயிட்ட சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, அசல் நிறைவேற்று மனுவில் சொல்லப்பட்டுள்ள 3 அயிட்ட சொத்துக்களில், 3வது அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை பொறுத்து தான், இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் தங்களுக்கு சொத்து கிரையமூலம் பாத்தியப்பட்டு, அதன்படி உரிமைமூலம் ஏற்பட்டுள்ளதாக விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

15) இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் 3 அயிட்ட சொத்து விபரங்களில் 3வது அயிட்ட சொத்து விபரம் என்பது, "**மதுரை டிஸ்ட்ரிக் சோழவந்தான் சப்டி, நிலக்கோட்டை தாலுகா, நீரேத்தான் கிராமத்தில் ரீசர்வே எண். 13/7பியில் ஏக்கர் 1 செண்டு 35.ல் மேல்புறம் மையம் செண்டு 17க்கு மால்: 2வது லக்க சொத்திற்கு 2,3,4,5 நபர்கள் சுப்பா ரெட்டியாருக்கு வாடகைக்கு விட்டிருக்கிற இடத்திற்கும் தெற்கு, லாலா என்ற பொன் பெருமாள் சாமி நாயுடு இடத்திற்கும் கிழக்கு, 2,3.4,5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கும் வடக்கும், மேற்கும், இதற்குள்பட்ட வடபுறம் கிழமேல் ஜாதியடி 85 கீழ்புறம் தென்வடல் ஜாதியடி 100 தென்புறம் கிழமேல் சாதியடி 66 மேல்புறம் தென்வடல் ஜாதியடி 106 இந்த மாலுக்குட்பட்டது.**"

இவ்வாறு அசல் நிறைவேற்று மனுலில் சொத்து விபரம் சொல்லப்பட்டுள்ளது.

16) எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணைபெற்றவர்கள்/வாதிகளால், அசல் வழக்கான 54/2003-ல் உரிமைமூல ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பகரப்பட்டுள்ளது. அதேசமயத்தில், ம.சா.ஆ.5ன் கீழ் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் முன்னோர்களால் தாவா மனு சொத்தை பொறுத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டதாக மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது.

17) இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த ராமானுஜம் அவர்களால் தாவா மனு அயிட்ட சொத்தில் உள்ள 1வது அயிட்ட சொத்திற்குண்டான ராமானுஜம் அவர்களால் கிரையம் வாங்கப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் ம.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதாவது ம.சா.ஆ.1 ஆவணத்திற்குண்டான மூல ஆவணம் ம.சா.ஆ.2 ஆகும். மேற்படி ம.சா.ஆ.2-ல் "....... பூமிநாதன், மேற்படி பூமிநாதனின் மனைவி லிங்கம்மாள், வெங்கட ரெட்டியார் மகன் நாராயணன், நாராயணன் மனைவி பொன்னுத்தாய் ஆகிய நாங்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் .....,இதில் கண்ட சொத்தை 21.06.1968 தேதியில் எங்களில் 2,4 நபர்கள் பெயரில் கிரையம் பெற்று, கூட்டுப்பபட்டா ஏற்பட்டு, ...." இவ்வாறு கிரைய பத்திர ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி, ம.சா.ஆ.2-ல் சொத்து விபரம் என்பது, **"சர்வே எண். 17/3பி ஏக்கர் 1 செண்ட் 35-ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி, தென்வடல் 16 அடி உள்ள 832 சதுரடி இடத்துக்கு, சுப்பம்மாள் இடத்துக்கும் வடக்கு, பேரூராட்சி இடத்திற்கும் தெற்கு, ராமையா வீட்டுக்கும் மேற்கு, வீரபுத்திர பிள்ளை வகையறா வீட்டிற்கும், இடத்துக்கும் கிழக்கு இதற்குட்பட்ட இடமும்"** இவ்வாறு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

18) ம.சா.ஆ.3 ஆவணம் என்பது, கடந்த 21.08.2000ம் தேதியில் ராமானுஜம் அவர்களால், ராமன் செட்டியார், லேட். சுப்பம்மாள் அவர்களின் மருமகளும், லேட் அம்மாவாசியின் மனைவியுமான செல்லம்மாள் -1, மேற்படி 1வது நபரின் முதல் மகளும், வரதராஜ் அவர்களின் மனைவியுமான பாண்டியம்மாள் தனக்காகவும், மைனர் வாரிசுகளுக்கு கார்டியனாகவும் சேர்ந்து மற்றும் இதர வகையறா ஆட்கள் எழுதிக்கொடுத்த புஞ்சை கிரையப்பத்திரம் ஆகும். மேற்படி, ம.சா.ஆ.3-ல் சுப்பம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, காலம் சென்றபின் நாங்கள் பூர்வமாக பாத்தியமாகவும், வாரிசுகள் முறையாகவும் பொதுவில் வைத்து நாங்கள் அனுபவித்துக்கொண்டு வருகிற இதனடியில் கண்ட புஞ்சை காலிமனையிடத்தையும், ..." இவ்வாறு குறிப்பிடப்பட்டு கிரையம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.3-ல் சொத்து விபரம் என்பதும், **மதுரை வடக்கு ரிடி, வாடிப்பட்டி சப்டி, வாடிப்பட்டி வட்டம், நீரேத்தான் கிராமம் புஞ்சை சர்வே 13-**

**7பி நிர்க்கு யு.டி.ஆர் சர்வே 13-20 நீர் புஞ்சை காலிமனையிடம் 0.01.5 ஆர்ஸ்க்கு செண்டு 4-1/2-ல் தென்புறம் செண்டு 3க்கு கிழமேலடி 44-1/2 தென்வடலடி 31 ஆக 1379-1/2 சதுரடிக்கு நான்குமால்**

**வடக்கு- தங்கள் கிரைய காலிமனையிடம்**

**கிழக்கே- மு. இராமையா ரெட்டி மனைவீடும், காலியிடமும்**

**தெற்கே - பழனிசாமி கவுண்டர் வகையறா மனைவீடு**

**மேற்கே -சர்வே எண். 13/19 ஆக யு.டி.ஆர் சர்வேயாகியுள்ள தென்வடல் 3 மீட்டர் அகல தெருப்பாதை இதற்குள்பட்டது.** இவ்வாறு சொத்து விபரம் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சொத்து விபரம் தான் இந்த மனுவில் சொத்து விபரத்தில் 2வது அயிட்ட சொத்திற்குண்டான மூல ஆவணம் ஆகும்.

19) ம.சா.ஆ.4 ஆவணம் கடந்த 24.06.1953 தேதியில், ராமன் செட்டியார் மனைவி சுப்பம்மாளுக்கு, காமாட்சியாபிள்ளை மனைவி சுப்பம்மாள்1, மேற்படி குமாரர் காமணபிள்ளை -2, ஆதிமூலம் -3 ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த ஒத்திப்பத்திரம் ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒத்திப்பத்திர ஆவணத்தில் சொத்து விபரத்தில், "**நீரேத்தான் கிராமம், சர்வே எண். 13/7பி-ல் ஏக்கர் 1 செண்ட் 36 மேல்புறம் செண்ட் -2க்கு எங்கள் கைவசம் உள்ள பாகத்திற்கும் வடக்கு மேற்கு தெற்கு, கிழக்கு இதற்குள்பட்ட.....**".இவ்வாறு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

20) ம.சா.ஆ.5 என்பது, "**கடந்த 11.12.1954 தேதியில், ராமன் செட்டியார் மனைவி சுப்பம்மாளுக்கு ஷை நீரேத்தான் கிராமம், லேட் காமாட்சியாபிள்ளை பாரி வேளார் பயிர் சுப்பம்மாள், ஷை யூரிலிருக்கும் ஷை காமாட்சியாபிள்ளை குமாரர் வேளார் காரர் காமணபிள்ளை 2. ஷை யூரிலிருக்கும் ஷை காமாட்சியாபிள்ளை இளையகுமாரர் ஷை-யூர், ஷை ஷை ஜீவனம் ஆதி மூலம்பிள்ளை 2. இம்மூன்று பேர்களும் எழுதிக்கொடுத்த புஞ்சை மனை வகையறா இடம் சுத்த கிரைய சாசனம் ஆகும்.**" மேற்படி ம.சா.ஆ.5-ல் சொத்து விபரம் என்பது, " **அயன் ரீசர்வே 13/7பி புஞ்சை ஏக்கர் 1 செண்ட் 35-ல் தென்பக்கத்தில் மேல்புரம் புஞ்சை மனையிடம் செண்ட் 3-1/4 நாங்கள் குருசாமி கவுண்டருக்கு அடமானம் வைத்திருக்கிற புஞ்சை மனையிடத்திற்கும் வடக்கு, எங்கள் பாகப்பத்திரத்தின்படி, எங்களுக்கு பாத்தியப்பட்ட D செட்டியூல் சொத்துக்கும் சர்வே நம்பர் 12 சொத்துக்கும் கிழக்கு, நாங்கள் குருசாமி வகையறாவிற்கு கிரையம் செய்து கொடுக்கிற புஞ்சைக்கும் டி செட்டியூல் சொத்திற்கும் தெற்கு, முத்துரெட்டியார் ஒத்தி புஞ்சைக்கும் மேற்கு, மேற்படி இடத்திற்குள் தெற்கு வீதி போகிறதுக்கு 7 அடி பாதை போட்டு கொள்ள வேண்டியது.**" இவ்வாறு சொத்து விபரம் சொல்லப்பட்டுள்ளது.

21) ம.சா.ஆ.6 என்பது, **கடந்த 02.05.1956 தேதியில், ஆராயி அம்மாள் என்பவருக்கு ராமன் செட்டியார் மனைவி சுப்பம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திர ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில், கடந்த 18.04.1951-ல் 15.09.1951லும் மற்றும் 11.02.1954லும் கிரையம் பெற்ற**

**அடியிற்கண்ட சொத்துக்களை பொறுத்து ..."** இவ்வாறு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சொத்து விபரம் என்பது, **"நீரேத்தான் கிராம் சர்வே எண். 13/7பி ஏககர் 1 செண்ட் 35-ல் தென்பக்கத்தில் மேல்புறம் செண்டு 3-1/4-ல் பிரிவினையில்லாத செண்ட் 1 5/8 மேற்படி செண்ட் 3-1/4க்கு மால் வீரஞ்செட்டியார் நஞ்சைக்கும் காலிமனைக்கும் வடக்கு, வீரபத்திரபிள்ளை வீட்டுக்கும் காலிமனைக்கும் கிழக்கு, குருசாமிரெட்டியார் காலிமனைக்கும் தெற்கு, முத்துரெட்டியார் காலிமனைக்கும் மேற்கு இதற்குள்பட்ட..."** இவ்வாறு கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

22) அதேபோல வா.சா.ஆ.7 என்பது, "24.09.1964 தேதியில், அழகர்சாமி ரெட்டியார் மனைவி பங்காரும்மாளுக்கு சுப்பம்மாள் வகையறாக்கள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் ஆகும். மேற்படி, சொத்து விபரத்தில், **"நீரேத்தான் கிராமம் சர்வே எண். 13/7பி ஏக்கர் 1, செண்ட் 35-ல் தென்பக்கத்தில் மேல்புறம் மனையிடம் செண்ட் 3-1/4க்கு கிழமேல் ஜாதியடி 52 தென்வடல் ஜாதியடி 31 உள்ள மனை..."** இவ்வாறு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

23) அதேபோல வா.சா.ஆ.8 என்பது, **"21.06.1978 தேதியில், பூமிநாதன் மனைவி லிங்கம்மாள், நாராயணன் செட்டியார் பொன்னுத்தாயி ஆகியோர்களுக்கு, அழகர்சாமி ரெட்டியார் மனைவி பங்காரு அம்மாள் அவர்களால் கிரையம் செய்து கொடுத்துள்ள பத்திரம் ஆகும். மேற்படி, ஆவணத்தில் நீரேத்தான் கிராமம் சர்வேஎண். 13/7பி ஏக்கர் 1, செண்ட் 35-ல் தென்பக்கத்தில் மேல்புறம் மனையிடம் செண்ட் 3-1/4க்கு கிழமேல் ஜாதியடி 52 தென்வடல் ஜாதியடி 31 உள்ள மனையிடம்..."** இவ்வாறு கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

24) இவ்வாறு, தாவா மனு சொத்தை பொறுத்து, எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் முன்னோர்களால், கிரையம் செய்து கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில், கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் ம.சா.ஆ.1ன் கீழ் கிரையம் பெறப்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களை பார்வையிடப்பட்ட வகையில் இந்த நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

25) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட ம.சா.ஆ.1க்குண்டான மூல ஆவணங்களாக ம.சா.ஆ.2 முதல் 8 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களை பார்வையிடப்பட்ட வகையில் சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

26) இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரங்களில் 3வது அயிட்ட சொத்தான சர்வே எண். 13/7பி-யைப் பொறுத்து தான் இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள்

தரப்பில் தனிப்பட்ட உரிமைமூல பாத்தியமாக விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

27) தாவா மனு சொத்தின் சர்வே எண். 13/7பி என்பது, ஆதியில் இந்த எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

28) ம.சா.ஆ.5ன் கீழ் இந்த எதிர்மனுதாரர்/தீர்ப்பாணைபெற்றவர்கள்/வாதிகளின் மூதாதையர்களால், தாவா மனுச் சொத்தின் சர்வே எண். 13/7பி-ல் உள்ள மொத்த விஸ்தீரணமான 1 ஏக்கர் 35 செண்ட்டில் ஒரு பகுதியான 3-1/4(மூன்றேகால்) விற்பனை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ம.சா.ஆ.5ன் கீழ் விற்பனை செய்யப்பட்ட சொத்தை பொறுத்து இந்த எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணைபெற்றவர்கள்/வாதிகளால் அசல் வழக்கான OS.No.54/2003-ல் மறைக்கப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களின் வாதுரையாக வாதுரைக்கப்பட்டுள்ளது.

29) ம.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்களை சமூக நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்ட வகையில், சர்வே எண். 13/7பி-ன் மொத்த விஸ்தீரணம் என்பது 1 ஏக்கர் 35 செண்ட் ஆகும் என்று அறிய முடிகிறது. மேற்படி, சர்வே எண். 13/7பி-ல் மொத்த விஸ்தீரணமான 1 ஏக்கர் 35 செண்ட்டில் தான் பல்வேறு கிரைய பத்திர ஆவணங்கள் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் மூதாதையர்களால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

30) ம.சா.ஆ.12 முதல் 16 ஆவணங்களை பொறுத்தவரை, இந்த மனுச் சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு ஆதரவாக இருக்கிறது என்பதற்கான ஆவணங்கள் அல்ல. மேற்படி தாவா சர்வே எண். 13/7பி-யை பொறுத்து, எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் முன்னோர்களால் மேலும் ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதற்கான ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

31) ம.சா.2 சாட்சி மூலம் சா.சா.ஆ.1 முதல் 22 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி, சா.சா.ஆ.1 முதல் 22 வரையிலான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தாவா சர்வே எண். 13 மற்றும் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான யுடிஆர் காலம் முதல் நாளது தேதி வரை உள்ள வருவாய் ஆவணங்கள் புலப்பட ஆவணங்கள், அடங்கல் பதிவேடு ஆவணங்கள் ”அ” பதிவேடு ஆகியவை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி, சா.சா.ஆ.1 முதல் 22 ஆவணங்களை கொண்டு இவ்வழக்கில், மனு சொத்தான சர்வே எண். 13/7பியை பொறுத்து, இந்த மனுவில் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு உரிமைமூலம் பாத்தியப்பட்டதாக தீர்மானிக்கக்கூடிய ஆவணங்கள் அல்ல என்று சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

32) கட்டளை 21 விதி 97 மற்றும் பிரிவு 99ன்படி தீர்ப்பாணை பெற்றவர் அல்லது நீதிமன்றத்தின் மூலம் சொத்தை விலைக்கு வாங்கியவர் அனுபவத்தை பெறுவதற்காக ஏதேனும் இடையூறு ஏற்படும் பட்சத்தில் இம்மனு தாக்கல் செய்திட உரிமையுள்ளதே தவிர, இந்த மனுவில் கண்டுள்ள மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால், மனு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகின்ற நிலையில், சுவாதீன இழப்பு ஏதும் ஏற்படாத நிலையில், இம்மனு தாக்கல் செய்திட கட்டளை 21 விதி 97 மற்றும் பிரிவு 99 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி, இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு அருகதை இல்லையென சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

33) கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன் கீழ் தாக்கல் செய்யக்கூடிய மனுக்களை பொறுத்தவரை, கட்டளை 21 விதி 101ன் கீழ் தீர்மானிக்கப்பட வேண்டும். அவ்வாறு, கட்டளை 21 விதி 101 என்பது,

> 101. Question to be determined – All questions (including, questions relating to right, title or interest in the property) arising, between the parties to a proceedings on an application under rule 97 or rule 99 or their representatives, and relevant to the adjudication of the application, shall be determined by the Court dealing, with the application, and not by a separate suit and for this purpose, the Court shall, notwithstanding anything to the contrary contained in any other law for the time being in force, be deemed to have jurisdiction to decide such questions]

இவ்வாறு, உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி, கட்டளை 21 விதி 97 மற்றும் 99 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனுவானது தீர்ப்பாணை பெற்றவர் மற்றும் தீர்ப்புக்கடனாளி அவர்களுடைய சார்பாற்றுநர்களிடையே விசாரணை செய்யப்படவேண்டுமே ஒழிய, இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு இம்மனு தாக்கல் செய்திட உரிமை ஏதும் இல்லையென்று கட்டளை 21 விதி 101 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

34) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில் ம.சா.1 சாட்சியம்

அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில்,

"உங்களுக்கு எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்றால், பழைய சர்வே எண். 13/7பி, புதிய எண். 13/20. அதில் நடைபாதை தவிர 4-3/4 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டதாகும்.

உங்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் பரிகாரம் காலத்தில் S.V. காந்திக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து உங்களுக்கு பாத்தியம் என்று பரிகாரம் கேட்டிட எதன் அடிப்படையில் உங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றால் எனக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தில் நான்கு எல்லைகளில் காந்தி ஒரு தரப்பினர் வருகிறார்.

இந்த மனுவில் மனு அட்டவணை சொத்தில் 3ம் தரப்பினரான S.V. காந்தி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக இந்த எதிர் மனுதார்கள் / வாதிகள் தாக்கல் செய்த அசல் நிறைவேற்றுதல் மனுவில் தள்ளபடி செய்யவேண்டும் என்று கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான்.

தாவா சொத்து சம்பந்தமான எதிர் மனுதார்கள் / வாதிகள் அசல் வழக்கு எண்.54/2003ல் யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அசல் வழக்கு எண்.54/2003ல் எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

பிரதிவாதிகள் சுப்ரமணிய ஐயர் மற்றும் சேதுராமன் இருவரும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாதவர்கள் என்று சொல்லியுள்ளீர்கள். எதன் அடிப்படையில் அவ்வாறு சொல்லியுள்ளீர்கள் என்றால் எங்களுடைய சொத்து வேறு, அதேபோல் சேதுராமன் மற்றும் சுப்ரமணிய ஐயர் சொத்து வேறு ஆகும்.

அசல் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்ட விபரம் உங்களுக்கு எப்போது தெரியும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து ஆணையரால் சொத்தை ஒப்படைப்பு செய்ய வந்தபோது தான் தெரிய வந்தது.

எதிர்மனுதாரர்கள் / வாதிகள் முறைகேடு செய்யப்பட்டு சொத்தை அபகரிக்க வந்ததாக நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு,

நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை வசம் எடுத்திட வரப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நீங்கள் இந்த மனு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு கிரைய சொத்தில் முன்னோர்கள் எத்தனை வருடங்களாக இந்த மனு சொத்தில் அனுபவத்தில் இருந்தார்கள் என்றால் சுமார் 35 வருடங்கள் இருந்திருப்பார்கள்.

2003 கால கட்டத்தில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வந்தபோது சொத்தில் யார் இருந்தார்கள் என்றால் என்னுடைய முன்கிரையதாரர்கள் இருந்தார்கள்.

நீங்கள் எப்போது சொத்தை கிரையம் வாங்கினீர்கள் என்றால் 2012ம் வருடம் ஆகும்.

2013ம் வருடம் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்தபோது நீங்கள் இருந்தீர்களா என்றால் இல்லை.

உங்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் அசல் நிறைவேற்றுதல் மனுவான E.P.27/2008ல் உள்ள எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளை இந்த மனுவில் தரப்பினர்களாக

**சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.**

**உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP No.1451/13 மனுவில் விபரம் குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது.**

**நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்ற ஆணையர், காவல்துறை, வருவாய் துறையினர் அசல் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தை வசம் எடுத்திட வந்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஒரே ஒரு முறை தான் தெரியும். "**

இவ்வாறு ம.சா.1 சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

35) இவ்வாறு உள்ள நிலையில், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில்,

**1) 2021(2)MWN (Civil) 578 Rahul S. Shah (v) Jiendra Kumar Gandhi & Others**

**CODE OF CIVIL PRECEDURE,1908 (5 of 1908), section 47, order 21 - CONSTITUTION OF INDIA, Articles 141,142,&144** - execution proceedings – mandatory Guidelines _ Unnecessary ordeal of litigation _ Urgent need to reduce delays and ensure delivery of complete justice – Mandatory Guidelines to all Courts dealing with Suits and Execution proceeding issued – All high Courts to update all Rules relation to Execution proceeding, issued -All High Courts to update all Rules relating to Execution of Decrees in consonance with directions within one years – Directions to remain enforceable till then.

**CODE OF CIVIL PROCEDURE, 1908(5 of 1908), Section47, Order 21, Rules 2, 11, 22, 97 & 99 – Execution proceedings** – Dilatory tactics – Steps to ensure unambliguous Decree- Execution Court not to go beyond Decree – Nonetheless, unwarranted, practice to conduct re-trial at Executive stage – Decree-holder deprived from fruits of Decree and undue benefit extended in favour of judgment-debtor.

**2) 2019(5) CTC 104 M. Sathyan Sundarajan, Managing Partner, M/s Athreyaa & Co.,prestige smart Kitchen, (v) K.R.S. Janakiraman**

**Code of Civil Procedure,1908 (5 of 1908, Order 21, Rules 97& 192**-Decree for specific performance _ Decree affirmed by supreme Court – Execution Petition filed for delivery of possession of Suit property – Obstruction .

Petition filed by Obstructor, held, not maintainable.

**3) AIR 1992 ALLAGABAD 198 Nisar Ahamd and others, Petitioners V. V. Addl. District Judge, Azamgarh and others,**

**(B) Civil P.C. (5of 1908), O.21 R.97 – Execution** – Obstruction or resistance by third party – It is not compulsory for decree – holder to make application under O.21. R. 97.

Court has go the interests the duty to protect the interests of the decree-holder as against

malafide obstructors, who may have intention to stultify the proceedings of execution.

**4) AIR 1988 ALLAHABAD 52 Smt. Sona Devi and others, Petitioners V. The District Judge, Allahabad and others,**

**Civil P.C. (1908), O. 21 Rr. 97,98,99 (as amended in 1976)** – Scope – Dispossession by decree- holder or purchaser – Objection under O.21, R. 99 – Maintainable by a person other than the judgment-debtor complaining of his dispossession only after he is dispossessed from the premises which constitutes the subject –matter of decree- If executing court were to stay its hands till investigation into third party's claim is not finally decided then it would result in depriving the decree- holder of his possession because of filing of repeated spurious claim. Case law discussed.

**5) AIR 1994 HIMACHALPRADESH 94 Ram Krishnan, (vs) Ruida and others**

**Civil P.C. (5 of 1908). O.21 Rr. 97, 99, 101** – Execution proceedings – Objection by third party in anticipation of his dispossession – Not permissible.

**6) AIR 2000 GUJARAT 36 Bhsvnagar Transport Company (v) Valmikbhai Himatlal Patel**

**(A) Civil P.C. (5 of 1908), O 21, R. 97** Decree of possession – Execution of Obstruction by third party – Adjudication – Filing of application by decree holder for resisting or removal of such obstruction – Is condition precedent – Obstructor cannot directly move executing Court for adjudication of his title to property.

8.Now referring to the Point No.1 mentioned above the Construction of Rule 97 of Order 21 is required to be looked into. A bare reading of Rule 97 of Order 21 given clear impression the the right to move the Court is conferred upon the decree holder only and not to anyone except decree holder.

This is so. Because if third party claims title over such property, which is being recovered in pursuance of an execution of a decree, remedy is always provided to him to file a civil suit for the tile, or if an .y such party is dispossessed, Rule 99 of the Order 21 of the Civil Procedure Code confers a right upon such party to move the Executing Court to inquire into the title of the property.

**7) 2003-4-L.W.438 R. Devadass (v) The Subordinate Judge, Ponneri, Trivellore Dist., C.P.C.. Order 21, Rules 91,99. Section 144,**

Court has got the duty to protect the interest of the decree-holder as against malafide obstruct ores, who may have intention to stultify the proceedings of execution .

10. The question before this Court is as to whether there is any adjudicatable material on his behalf? This is so because the Court have got a duty to protect the interests of the

decree –holder as against the mala fide obstructer, who may have an intention to stultify the proceedings of execution. It is not wrong on the part of the Executing Court to examine the availability of the adjudicatable matters in the application of obstruction filed by the stranger to the decree. A blind and stereo types method of receiving and activating every application without nowing as to whether it is bona fide or mala fide is an unhealthy trend and before and application is entertained, especially at the state of execution of a hardly won decree the Executing Court has got an inherent duty to search for the availability of the bona fide adjudicatable material.

**8) (2004)4 M.L.J. 118 (S.C.)P.Janardhana Rao (v) Kannan and others**

**Civil procedure Code (V of 1908), O.21, Rule 97** – suit for ejectment – Decree obtained – Execution of the decree – Obstruction by a person claiming to be in possession – Such objections are barred by the provisions of O.21, Rule 97, C.P.C.

**9. CIVIL APPEAL No.4258 OF 2022 Ram Kumar Vs State of Uttar Pradesh and** others

15. A “necessary party” is a person who ought to have been joined as a party and in whose absence no effective decree could be passed at all by the court. If a “necessary party” is not impleaded, the suit itself is liable to be dismissed. A “proper party” is a party who, though not a necessary party, is a person whose presence would enable the court to completely, effectively and adequately adjudicate upon all matters in dispute in the suit, though he need not be a person in favour of or against whom the decree is to be made. If a person is not found to be a proper or necessary party, the court has no jurisdiction to implead him, against the wishes of the plaintiff. The fact that a person is likely to secure a right/interest in a suit property, after the suit is decided against the plaintiff, will not make such person a necessary party or a proper party to the suit for specific performance.”

**10) Allahabad High Court WRIT C.No.4788 of 2015 Kishan Lal Barwa VsSharda Saharan & Another**

"it is the settled proposition of law that a judgment or decree obtained by playing fraud on the court is a nullity and non est in the eyes of law. Such a judgment/decree --- by the first court or by the highest court --- has to be treated as a nullity by every court, whether superior or inferior. It can be challenged in any court even in collateral proceedings."

2. According to Story's Equity Jurisprudence, 14th Edn., Volume 1, paragraph 263:

"Fraud indeed, in the sense of a Court of Equity, properly includes all acts, omissions, and concealments which involve a breach of legal or equitable duty, trust, or confidence, justly

reposed, and are injurious to another, or by which an undue and conscientious advantage is taken of another."

**11. 1996 SCC (3) 301 Sabitri Dei and Others Vs Sarat Chandra Rout and others.**

Having heard the learned counsel for the parties and on examining the different provisions of the Orissa Estate Abolitions Act, we find sufficient force in both the contentions raised by Mr. Misra, learned counsel for the appellant. Two questions really arise for our consideration:

1) Whether the decree in question can be held to be a nullity?

2) Whether the plaintiff - decree holder having lost his right of proprietorship in the property, the Executing Court can refuse to execute the decree?

- deemed to have been finally determined by an erroneous decision of a court - Therefore, the doctrine of res judicata does not apply to a case of decree of nullity. If the court inherently lacks jurisdiction consent cannot confer jurisdiction. Where certain statutory X ; ; rights in a welfare legislation are created, the doctrine of waiver also does ; not apply to A case of decree where the court inherently lacks jurisdiction."

36) மாறாக, இக்கோரிக்கை மனுதாரரால், அசல் வழக்கு தீர்ப்பாணை மோசடியாக பெறப்பட்டது என்றும், சொத்தில் தனிப்பட்ட உரிமைப்பாத்தியம் உள்ள நிலையில், தனிப்பட்ட அசல் வழக்காக தாக்கல் செய்யாமல் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன்படி கோரிக்கை/ஆட்சேபணை மனு தாக்கல் செய்யலாம் என்றும், அதனை விதி 101ன்படி நீதிமுறையில் தீர்வு காணவேண்டும் என்றும் ஏற்கனவே கோரிக்கை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது முன்தீர்ப்பு தடைக்கோட்பாடாக அமையாது என்று அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையில் இக்கோரிக்கை/ஆட்சேபணை மனுதாரர் தரப்பினர் இல்லையென்றும், எனவே மோசடியாக பெற்ற தீர்ப்பாணையினை ஆட்சேபணை செய்ய உரிமை உண்டு என்றும், முழு விசாரணையின்றி தள்ளுபடி செய்த உத்திரவு பின்னீடு தாக்கல் செய்யப்படும் கோரிக்கை மனுவிற்கு முன்தீர்ப்பு தடையாக அமையாது என்றும், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் வாதுரைக்கப்பட்டது.

37) அதேபோல, எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகளால்,

**2021(2) MWN (Civil) 578 Rahul S. Shah (v) Jinendra Kumar Gandhi & others**

25. These provisions contemplate that for execution of decrees, Executing Court must not go beyond the decree. However, there is steady rise of proceedings akin to a re-trial at the time of execution causing failure of realisation of fruits of decree and relief which the party seeks from the courts despite there being a decree in their favour. Experience has shown that various objections are filed before the Executing Court and the decree holder is deprived of the fruits of the litigation and the judgment debtor, in abuse of process of law, is allowed to benefit from the subject matter which he is otherwise not entitled to.

33. In relation to execution of a decree of possession of immovable property, it would be

worthwhile to mention the twin objections which could be read. Whereas under Order XXI Rule 97, a decree holder can approach the court pointing out about the obstruction and require the court to pass an order to deal with the obstructionist for executing a decree for delivering the possession of the property, the obstructionist can also similarly raise objections by raising new issues which take considerable time for determination.

35. Having considered the above mentioned legal complexities, the large pendency of execution proceedings and the large number of instances of abuse of process of execution, we are of the opinion that to avoid controversies and multiple issues of a very vexed question emanating from the rights claimed by third parties, the Court must play an active role in deciding all such related issues to the subject matter during adjudication of the suit itself and ensure that a clear, unambiguous, and executable decree is passed in any suit.

**2) 2022(4) CTC 278**
**Sriram Housing Finance and Investment India Ltd (vs) Omesh Mishra Memorial Charitable Trust.**
15. On conjoint reading of the aforesaid provisions, it can be observed that under Rule 97, it is only the ‘decree holder’ who is entitled to make an application in case where he is offered resistance or obstruction by ‘any person’. In the present case, as admitted by the appellant itself, it is a bonafide purchaser of the property and not the ‘decree holder’. As available from the material placed on record, it is the respondent trust alongwith legal heirs of late N.D. Mishra who are the decree holders and not the appellant. Therefore, it is obvious that appellant cannot take shelter of Rule 97 as stated above to raise objections against execution of decree passed in favour of respondent. Further, Rule 99 pertains to making a complaint to the Court against ‘dispossession’ of the immovable property by the person in ‘possession’ of the property by the holder of a decree or purchaser thereof. It is factually not in dispute that appellant purchased the said property from Mr. Yogesh Mishra vide sale deed dated 12.04.2004 and has been in vacant and physical possession of the property since then. Had it been the case that the appellant was dispossessed by the respondent trust in execution of decree dated 02.09.2003, the appellant would have been well within the ambit of Rule 99 to make an application seeking appropriate relief to be put back in possession. On the contrary, the appellant in the instant case was never dispossessed from the property in question and till date, as contended and unrefuted, the possession of same rests with the appellant. Considering the aforesaid, the appellant cannot be said to be entitled to make an application under Rule 99 raising objections in execution proceedings since he has never been dispossessed as required under Rule 99.

16. Now, as stated above, applications under Rule 97 and Rule 99 are subject to Rule 101 which provides for determination of questions relating to disputes as to right, title or interest in the property arising between the parties to the proceedings or their representatives on an application made under Rule 97 or Rule 99. Effectively, the said Rule does away with the requirement of filing of fresh suit for adjudication of disputes as mentioned above. Now, in the present case, Order XXI Rule 101 has no applicability as

the appellant is neither entitled to make an application under Rule 97 nor Rule 99 for the reasons stated above. Accordingly, we find no substance in the argument raised by learned counsel for the appellant. In such circumstances, Executing Court had no occasion to frame issues and give direction to parties to lead evidence on objections raised by appellant. By doing so, the Executing Court transgressed the scope of Order XXI Rule 97 and Rule 99. Therefore, in our considered view, the High Court has rightly set aside the order of Trial Court entertaining the objections filed by appellant under Order XXI Rule 97 to Rule 102.

**3) 2019 (5) CTC 104 M. Sathyan Sundarajan Vs K.R.S Janakiraman**

' Rules not applicable to transferee pendente lite. - Nothing in Rules 98 & 100 shall apply to resistance or obstruction in execution of a Decree for the possession of immovable property by a person to whom the judgment-debtor has transferred the property after the institution of the Suit in which the Decree was passed or to the dispossession of any such person.

"12. The above Rule makes it very clear that a person was inducted by the Judgment-debtor during the pendency of the proceedings in respect of the immovable property, in which the Decree was passed, he has no right to obstruct the delivery. Therefore, the contention of the Revision Petitioner that he is a bona fide tenant, he has right to be beard before the Execution Court. Such contention nothing but delay in tactics to delay the execution of the valid Decree passed by the Competent Court and reached finality. Hence, I do not find merits in the Revision Petition and the same is liable to be dismissed. The Execution Court is directed to proceed with the Execution proceedings and issue necessary Police aid for effecting the delivery of the property.

இவ்வாறு, எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளால் சுட்டிக்காட்டி வாதுரைக்கப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புரைகளின் கருத்துரைகளை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

38) இம்மனுவின் சொத்து விபரத்தில், விஸ்தீரணம் என்பது, 1379-1/2 சதுரடிக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், ம.சா.1 தன்னுடைய சாட்சி விசாரணையில், "**உங்களுக்கு எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்றால், பழைய சர்வே எண். 13/7பி-ல் புதிய சர்வே எண் 13/20 அதில் நடைபாதை தவிர 4-3/4 செண்ட் எனக்கு பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது.** "

39) ம.சா.ஆ.1 முதல் 8 ஆவணங்களின் அடிப்படையில், தாவா மனு சொத்திற்கு இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு ஆதரவாக உரிமைமூலம் உள்ளதாக சமூக நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், தாவா சர்வே எண். 13/7பி-ல் உள்ள மொத்த விஸ்தீரணமான 1 ஏக்கர் 35 செண்ட்டில் ஒரு பகுதி விஸ்தீரணத்தை பொறுத்து தான் இந்த

மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் ம.சா.ஆ.1 ன் கீழ் கிரையம் பெறப்பட்டுள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

40) மேற்படி, ம.சா.ஆ.1 முதல் 8 ஆவணங்களின்படி, தாவா மனு சொத்தின் சர்வே எண். 13/7பி-ல் மீதமுள்ள விஸ்தீரணத்தில் இந்த எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளின் முன்னோர்களுக்கு உரிமைமூலம் உள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அனுமானிக்கப்படுகிறது. மேலும், அசல் வழக்கு எண். 54/2003-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படியும், இந்த எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு உரிமை மூலம் உள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

41) இவ்வாறு, மனு சொத்தை பொறுத்து இந்த மனுதாரர்கள்/3ம்கோரிக்கை தரப்பினர்களுக்கு அனுபவ சுவாதீன இழப்பு ஏதும் ஏற்படாத நிலையில், இந்த மனு தாக்கல் செய்திட மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன்படியும், விதி 101ன்படியும் உரிமை ஏதும் இல்லையென்று சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

42) மேலும், இம்மனுவின் நிறைவேற்று மனுவினை ரத்து செய்யக்கோரி, ஏற்கனவே ஒரு 3ம் கோரிக்கை தரப்பினரான S.V காந்தி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட EA.No. 55/2021 மனுவானது இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 02.03.2022 தேதியில் சமூக நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேசமயத்தில், இம்மனுவின் அசல் வழக்கான OS.No. 54/2003-ல் கடந்த 29.10.2003-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினை ரத்து செய்யக்கோரியும், தாவா மனு சொத்தினை உள்ளடக்கி இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்/வாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், S.V. காந்தி என்பவரால் இந்த நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண். 147/2022-ன்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கும் சமூக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றது என்பதும் சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

43) ஆகவே, மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் அசல் நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளியாக இல்லாத நிலையிலும், தாவா மனுச்சொத்தை பொறுத்து நாளது தேதியில் சுவாதீன இழப்பு ஏற்படாத நிலையிலும், அது தொடர்பாக பரிகாரம் கோரிட சட்டப்படி எந்தவித முகாந்திரமும் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு இல்லையென்றும் சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ளப்பட்டு முடிவு காணப்படுவதால், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களால் இந்த மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தகதல்ல என்றே சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ளப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

44) மேலும், நிறைவேற்றல் மனு மற்றும் அசல் வழக்கு தரப்பினர்களுக்கு இந்த மனுதுாரர்கள்/3ம் கோரிக்கைதாரர்கள் மற்றும் அவர்களது முன் பாத்தியஸ்தர்களிடையே தாவா சொத்து தொடர்பாக பல்வேறு கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

45) அதேசமயம், மனு தாக்கல் செய்த தேதியில் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு தாவா சொத்தில் சுவாதீன இழப்பு ஏற்படவில்லை. இன்றைய தேதி வரை தாவா சொத்தின் ஒரு பகுதியில் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் அனுபவம் செய்து வருவதாக இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. மேலும் இம்மனுவில், **"மேற்படி சொத்து வழக்கிடை சொத்து 3வது லக்க சொத்தில் அடங்கியுள்ளதாக 2003ம் ஆண்டில் அசல் வழக்கில் ஆணையாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது"** எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கு விபரம் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு முன்கூட்டியே தெரிந்துள்ளதாகவே கருத வாய்ப்புள்ளது. மேலும், தீர்ப்பாணையின்படி சுவாதீன ஒப்படைப்பிற்கு பலமுறை நீதிமன்ற அமீன் சென்றும், பிரச்சனை ஏற்பட்டதால், காவல்துறை பாதுகாப்பு மற்றும் சர்வேயர் மூலம் அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நிறைவேற்றல் மனு நடவடிக்கையில் வழக்கு கோப்புகள் மூலம் சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

46) மேலும் சீராய்வு மனு எண்.1451/2013 நடவடிக்கையிலும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்/ஆணையாளர் தாவா சொத்தினை அளவீடு செய்து அடையாளம் கண்டு நிர்ணயம் செய்ததாக மேற்படி உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிரச்சனைக்குரிய தாவா சொத்தின் ஒரு பகுதியில் அனுபவத்தில் இருந்து வருகின்ற மனுதாரர்களால் உடனடியாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்காமல், சுவாதீன ஒப்படைப்பு இறுதி நிலையில், இம்மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றே சமூக நீதிமன்றத்தால் கருதப்படுகிறது.

47) மேலும் சுவாதீன ஒப்படைப்பு தொடர்பான ஆட்சேபணையினை அசல் வழக்கு நடவடிக்கையிலேயே முன்னிலைப்படுத்தப்படவேண்டும் என்றும், நீதிமன்ற நடவடிக்கையில் ஏற்கனவே ஆணையர் நியமனம் செய்திருக்கும் பட்சத்தில், நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையில் தேவையற்ற மனு நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் சுவாதீன இழப்பு நிலைக்கு பின்னீடே உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 99ன்படி மனு தாக்கல் செய்ய இயலும் என்றும், முன்தீர்ப்பாக மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**R. Janakiammal (v) S.K. Kumarasamy 2021 (2)MWN (Civil) 544(SC)**

**Order 21 Rule 99 – Scope.- Under Order 21, Rule 99,** it is slightly better position, wherein a person, other that the judgment-debtor, when is dispossessed of immovable property by the decree-holder for possession of such property, files and application with objections. Such objections also lead to re -trial, but as the objector is already dispossessed, the execution of the decree is more probable and expeditious. In Order 21, Rule 97, the obstructionist comes up with various objections that ideally should have been raised at the time of adjudication of suit. Such obstructions for execution could be avoided if a court Commissioner is appointed at the proper time.

48) மேலும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 97 மற்றும் 99ன்படி நிறைவேற்றல் மனு நடவடிக்கைகளில் மனுக்கள் தாக்கல் செய்யப்படும்போது, நிறைவேற்றல் நீதிமன்றம் கண்டிப்பாக ஏற்கனவே கோரிக்கை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், கண்டிப்புடனும் அரிதாகவும் மட்டுமே மேற்படி மனுக்களை பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அடியிற்கண்ட வழக்கில் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தால் வழிகாட்டுதல் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**R. Janakiammal (v) S.K. Kumarasamy 2021 (2)MWN (Civil) 544(SC)**

**Order 21 Rule 97 and 99 – Execution of decree.** - If an objection is received in respect of "suit property" under Order 21, Rule 97, or Rule 99 of CPC, at the stage of execution of the decree, the executing Court shall deal with it after taking into account the fact that no such objection or claim was received during the pendency of the suit, especially in view of the public notice issued during trial. Such claims under Order 21, Rule 97 or Rule 99, must be dealt strictly and be considered/entertained rarely.

49) ஆகவே, மேற்கண்ட இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு பொருண்மை மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாட்டின்படி, இந்த மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தீர்ப்பு கடனாளியாக இல்லாத நிலையிலும் (Not judgment debtor) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு தாவா சொத்தின் சுவாதீன இழப்பு ஏற்படாத நிலையிலும், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவில் பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என சமூக நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டு, அதனடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இறுதியாக,

இம்மனுவின் மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தீர்ப்பு கடனாளியாக இல்லாத நிலையிலும் (Not judgment debtor) மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்களுக்கு தாவா

சொத்தின் சுவாதீன இழப்பு ஏற்படாத நிலையிலும், மனுதாரர்கள்/3ம் கோரிக்கை தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவின் பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என சமூக நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டு, அதனடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**<u>1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 - ரமேஷ்
ம.சா.2 - நீரேத்தான் கிராம நிர்வாக அலுவலர்

**<u>2) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்:</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 17.12.2012ம் தேதியிட்ட மனுதாரர்கள் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.2 | 24.02.2000ம் தேதியிட்ட ராமானுஜம் என்பவரின் கிரையபத்திரம் அசல் |
| ம.சா.ஆ.3 | 21.08.2000ம் தேதியிட்ட ராமானுஜம் என்பவரின் கிரைய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.4 | 24.06.1953ம் தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.5 | 11.12.1954ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.6 | 20.05.1956ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.7 | 24.09.1966ம் தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.8 | 21.06.1968ம் தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.9 | 23.10.2021ம் தேதியிட்ட மனுதாரர்கள் பெயரிலான பட்டா எண். 1778ன்படியான பட்டா கணினி ஆவணம் |
| ம.சா.ஆ.10 | அசல் வழக்கு எண். 54/2003 வழக்கின் பிராது சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 | IA.No.122/2003 in OS.No. 54/2003-ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சான்று நகல் |
| ம.சா.ஆ.12 | 02.07.1984ம் தேதியிட்ட ஈடுகடன் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.13 | 15.10.1954 தேதியிட்ட ஈடுகடன் செல் ரசீது பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | 19.08.1965ம் தேதியிட்ட காமணபிள்ளை எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.15 | 19.08.1964ம் தேதியிட்ட காமணபிள்ளை எழுதிக்கொடுத்த பஸ் நிலைய காலிமனை அக்ரிமெண்ட் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.16 | ரீசர்வே எண். 10/6 க்குண்டான வில்லங்க சான்றிதழ் |

**<u>3) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**4) சாட்சிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| சா.சா.ஆ.1 | 05.08.2022- சர்வே எண் 13/18,20,22 க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.2 | 05.08.2022- சர்வே எண் 13/25க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.3 | 05.08.2022- சர்வே எண் 13/7B2Aக்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.4 | 05.08.2022- சர்வே எண் 10/6C1, 10/6C2க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.5 | 05.08.2022- சர்வே எண் 13/101,111,113,114க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.6 | 05.08.2022- சர்வே எண் 13/18,20,22,25க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| சா.சா.ஆ.7 | 05.08.2022- சர்வேஎண் 13/101 ராமச்சந்திரன் பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.8 | 05.08.2022- சர்வேஎண் 13/25 சங்கிலி பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.9 | 05.08.2022- சர்வேஎண் 13/114 SV காந்தி பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.10 | 05.08.2022- சர்வேஎண் 10/6C2-க்கு SV காந்தி பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.11 | 05.08.2022- சர்வேஎண் 10/6C2 & 13/7B2A-க்கு ராமச்சந்திரன் பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.12 | 05.08.2022- சர்வேஎண் 13/20-க்கு இராமனுஜம் பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.13 | 05.08.2022- சர்வே எண் 13/22-க்கு கொ. ராமுரெட்டி பெயரில் உள்ள சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.14 | 05.08.2022- நீரேத்தான் கிராமம் பைனல் சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.15 | 05.08.2022- நீரேத்தான் கிராமம் பைனல் சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.16 | 05.08.2022- நீரேத்தான் கிராமம் பைனல் சிட்டா உண்மை நகல் |
| சா.சா.ஆ.17 | 05.08.2022- நீரேத்தான் கிராமம், 1431-ம் பசலிக்கான கிராம கணக்கு எண்-2 உண்மை நகல் |
| சா.சா.ஆ.18 | 05.08.2022- நீரேத்தான் கிராமம், 1431-ம் பசலிக்கான கிராம கணக்கு எண்-2 உண்மை நகல் |
| சா.சா.ஆ.19 | 05.08.2022- நீரேத்தான் கிராமம், 1431-ம் பசலிக்கான கிராம கணக்கு எண்-2 உண்மை நகல் |
| சா.சா.ஆ.20 | 05.08.2022- நீரேத்தான் கிராமம், 1431-ம் பசலிக்கான கிராம கணக்கு எண்-2 உண்மை நகல் |
| சா.சா.ஆ.21 | 05.08.2022-சர்வே எண் 10க்கான புலப்பட வரைபடம் உண்மை நகல் |
| சா.சா.ஆ.22 | 05.08.2022-சர்வே எண் 13க்கான புலப்பட வரைபடம் உண்மை நகல் |

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி

//உண்மை நகல்//